The Times of India
Dated: 20.12.2024

# HC rejects plea against ECI's approval of EPS as AIADMK chief

Sureshkumar.K
@timesofindia.com

**Chennai:** A plea seeking a direction to the Election Commission to reconsider its decision to approve Edappadi K Palaniswami as the general secretary of AIADMK was dismissed by Madras high court on Thursday.

A division bench of Justice R Subramanian and Justice C Kumarappan observed that the plea was nothing but publicity-seeking litigation.

According to the petitioners, Ramkumar Adityan and K C Suren Palanisamy, after the demise of former chief minister J Jayalalithaa, Edappadi K Palaniswami and O Panneerselvam made several unamendable amendments to the party constitution, including abolishment of the post of general secretary.

In July 22, Palaniswami took over the charge of the party after expelling Panneerselvam from the party. Subsequently, the general council of AIADMK elected Palaniswami as the general secretary, which they claimed was unfair as only the primary members of the party could elect the general secretary.

**Justice R Subramanian & Justice C Kumarappan observed that the plea was nothing but publicity-seeking litigation**



Despite several pending suits challenging the election, the ECI recognised him as the general secretary, they added.

They further pointed out that Palaniswami filed an affidavit before a special court seeking to dispense with his appearance on the ground that he is 70 years old and is unlikely to continue in active politics. In this situation, allowing him to continue as general secretary would lead to another power struggle, they added.

D.T. Next, Dated: 20.12.2024

# EPS can continue as general secretary: HC

Citing AIADMK's downfall and amendments to provision against norms, the pleas sought EPS's ouster from party chief post

**CHENNAI: It is a publicity interest litigation, observed the Madras High Court while dismissing a petition demanding the Election Commission of India (ECI) to disallow Edappadi K Palaniswami to continue as the general secretary of AIADMK because he amended the unamendable provisions of the party and also caused the party's downfall.**

A division bench of Justice R Subramanian and Justice C Kumarappan refused to entertain the petition moved by Ramkumar Adityan and KC Suren Palanisamy who claimed themselves as the primary members of AIADMK. The petitioners sought HC's direction to the election commission to allow them to submit documents regarding their representation and pass further orders.

The petitioners claimed that after the demise of the late Chief Minister and party leader J Jayalalithaa, Palaniswami and former chief minister O Panneerselvam made several unamendable amendments in the party Constitution, including the abolishment of the general secretary post. Panneerselvam and Palaniswami appointed themselves as co-ordinator and joint co-ordinator of the party by usurping the power of general secretary without following any procedures, stated the plea.

Later the power battle between Palaniswami and Panneerselvam reached a boiling point resulting in the latter's expulsion from the party in a resolution passed in the general council meeting held in July 2022. Subsequently, the general council elected Palaniswami as the general secretary. This move is unfair because only the primary members have the right to elect a general secretary, said the petitioners.


**Petitioners sought HC's direction to the ECI to allow them to submit documents regarding their representation and pass further orders**

Challenging the amendment of the party's laws and the election of Palaniswami as the party's general secretary, several suits have been filed in civil courts, submitted the petitioners.

The petitioners pointed out that despite these civil suits still pending the election commission accepted Palaniswami as general secretary. The petitioners contended that they moved the petition seeking to consider their case because no action had been taken in this regard despite several representations being made to the election commission.

The petitioners also claimed that after the ascendance of Palaniswami as the general secretary, AIADMK continuously lost several elections including local body elections. The party's vote share has fallen and its reputation under Palaniswami's leadership has declined among the voters and party members. Palaniswami, citing he is aged around 70 years and his active participation in party works or the ensuing 2026 assembly election is unlikely, had submitted an affidavit before a special court seeking to dispense his presence, claimed the petitioners.

Palaniswami may retire from politics as he has health issues. In this situation, allowing him to be the party's general secretary would lead to another power struggle, and hinder the growth of the party, contented the petitioners.



Daily Thanthi

Dated: 20-12-2024

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பதவி:

# தேர்தல் ஆணையம் மறுபரிசீலனை செய்யக்கோரிய வழக்கு தள்ளுபடி

## ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, டிச.20-

அ.தி.மு.க. பொதுச்செயலாளராக எடப்பாடி பழனிசாமி தேர்வு செய்யப்பட்டதற்கு அங்கிகாரம் அளித்ததை மறுபரிசீலனை செய்ய தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூரை சேர்ந்த ராம்குமார் ஆதித்தன் மற்றும் கே.சி.சுரேன் பழனிச்சாமி ஆகியோர் சென்னை ஐகோர்ட்டில் தாக்கல் செய்துள்ள மனுவில் கூறியிருப்பதாவது:-

### விதிகள் திருத்தம்

நாங்கள் அ.தி.மு.க., உறுப்பினராக உள்ளோம். ஜெயலலிதா மறைவுக்கு பிறகு அ.தி.மு.க., தொண்டர்கள், கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியிடுவதை தடுக்கும் வகையில் விதிகளை திருத்தம் செய்துள்ளனர். இதற்காக 2022-ம் ஆண்டு ஜூலை மாதம் நடந்த பொதுக்குழுவில் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளனர். இதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கு சென்னை ஐகோர்ட்டில் நிலுவையில் உள்ளது.

இதற்கிடையில் திருத்தப்பட்ட விதிகளின்படி எடப்பாடி பழனிசாமி அ.தி.மு.க.வின் பொதுச் செயலாளராகதேர்ந்தெடுக்கப்பட்டார்.

### நிபந்தனை

இதற்குதேர்தல் ஆணையம் நிபந்தனையுடன் அங்கீகாரம் அளித்துள்ளது. அதாவது, ஐகோர்ட்டில் நிலுவையில் உள்ள வழக்கின் தீர்ப்புக்கு, இந்ததிருத்த விதியும், பொதுச் செயலாளர் தேர்வும் கட்டுப்பட்டது என்று கூறியுள்ளது. இந்தநிலையில், கட்சியின் தொண்டர்கள் மற்றும் எதிர்காலத்தை பாதுகாக்கும் வகையில், திருத்தப்பட்ட கட்சி விதிகளையும், எடப்பாடி பழனிசாமியை பொதுச்செயலாளராக தேர்வு செய்ததையும் அங்கீகரித்ததை மறுபரிசிலனை செய்யவேண்டும் என்று தேர்தல் ஆணையத்துக்கு மனு கொடுத்தோம். இதை பரிசீலிக்கும்படி தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்.

இவ்வாறு அதில் கூறியிருந்தனர்.

### தள்ளுபடி

இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுப்பிரமணியன், சி.குமரப்பன் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், 'அ.தி.மு.க.வுக்கு எதிரான வழக்குகள் முடிவுக்கு வரும்வரை அந்த கட்சிக்கு இரட்டை இலை சின்னம் ஒதுக்கக்கூடாது என்ற கோரிக்கை மனுவை 4 வாரத்துக்குள் பரிசீலிக்கும்படி, தேர்தல் ஆணையத்துக்கு ஏற்கனவே ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. இந்தநிலையில், இந்த வழக்கு விளம்பரத்துக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகதெரிகிறது' என்று கருத்து தெரிவித்தனர்.

அதற்கு மனுதாரர் தரப்பில், 'தேர்தல் ஆணையத்துக்கு கொடுத்த மனு மீதான விசாரணைக்கு வருகிற 24-ந்தேதி நேரில் ஆஜராகும்படி, மனுதாரர்களுக்கு தேர்தல் ஆணையம் சம்மன் அனுப்பியுள்ளது' என்று விளக்கம் அளிக்கப்பட்டது.

இதையடுத்து இந்த வழக்கை தள்ளுபடி செய்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

The Hindu (Tamil)

Dated: 20.12.2024

### 2022-ம் ஆண்டு நடந்த பொதுக்குழுவில் அதிமுக பொதுச் செயலாளராக

# பழனிசாமியை அங்கீகரித்ததை மறுபரிசீலனை செய்ய கோரிய மனு தள்ளுபடி

சென்னை

பழனிசாமியை அதிமுக பொதுச் செயலாளராக அங்கீகரித்ததை மறுபரிசீலனை செய்ய தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரிய வழக்கை தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதுதொடர்பாக திருச்செந்தூரைச் சேர்ந்த வழக்கறிஞரான ராம்குமார் ஆதித்தன், கோவையைச் சேர்ந்த கே.சி. சுரேன் பழனிசாமி ஆகியோர் சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த மனுவில் கூறியிருந்ததாவது:

முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மறைவுக்குப்பிறகு அதிமுக தொண்டர்கள், கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியிடுவதை தடுக்கும் வகையில், கடந்த 2022 ம் ஆண்டு ஜுலையில் நடந்த பொதுக்குழுவில், அதிமுகவின் அடிப்படை சட்ட விதிகள் திருத்தப்பட்டன. அதன்படி அதிமுகவின் பொதுச் செயலாளர் பதவிக்கு போட்டியிட 10 ஆண்டுகள் உறுப்பினராக இருக்க வேண்டும்.

#### கடுமையான விதிகள்

5 ஆண்டுகளுக்கு தலைமைக் கழக பதவி வகித்து இருக்க வேண்டும். 10 மாவட்டச் செயலாளர்கள் முன்மொழிய வேண்டும். 10 மாவட்டச் செயலாளர்கள் வழிமொழிய வேண்டும் என விதிகள் கடுமையாக்கப்பட்டுள்ளன. இதன்மூலம் 2 கோடி தொண்டர்களைக் கொண்ட அதிமுகவில் மூன்று நபர்கள் மட்டுமே பொதுச்செயலாளர் தேர்தலில் போட்டியிட முடியும்.

ஆனால் இதற்கு முன்பாக இருந்த விதிகளின்படி 5 ஆண்டுகள் கட்சியில் உறுப்பினராக இருந்தாலே பொதுச் செயலாளர் தேர்தலில் போட்டியிட முடியும். திருத்தப்பட்ட விதிகள் அதிமுக உறுப்பினர்களின் உரிமைகளுக்கு எதிரானது மட்டுமின்றி சட்டவிரோதமானதும்கூட.

எனவே கட்சியின் எதிர்காலம் மற்றும் உரிமையை பாதுகாக்கும் வகையில் அதிமுகவில் திருத்தப்பட்ட விதிகளுக்கும், அதிமுக பொதுச்செயலாளராக பழனிசாமி தேர்வு செய்யப்பட்டதை அங்கீகரித்துள்ளதை மறுபரிசீலனை செய்ய தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும். மேலும் இதுதொடர்பாக நேரில் விளக்கம் அளிக்கவும், வழக்கு தொடர்பான ஆவணங்களை பரிசீலிக்கவும் தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும், எனக் கோரியிருந்தனர்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஆர். சுப்பிரமணியன், சி.குமரப்பன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், இந்த வழக்கு விளம்பர நோக்கத்துடன் தொடரப்பட்டுள்ளது எனக்கூறி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளனர்.

Dinamalar

Dated: 20.12.2024

# ஒரே தேர்தல் மசோதா கூட்டுக்குழு அமைப்பு

நாடு முழுதும் ஒரே நேரத்தில் லோக்சபா மற்றும் சட்டசபைகளுக்கு தேர்தல் நடத்த வகை செய்யும் மசோதா, லோக்சபாவில் சமீபத்தில் தாக்கல் செய்யப்பட்டது. மசோதாவை ஜே.பி.சி., எனப்படும், பார்லிமென்ட் கூட்டுக்குழு ஆய்வுக்கு அனுப்புவதற்கு, லோக்சபா எம்.பி.,க்கள் அதிகம் பேர் ஆதரவு தெரிவித்தனர்.

இதையடுத்து, இந்த மசோதாவை ஆய்வு செய்வதற்காக, 31 எம்.பி.,க்கள் அடங்கிய பார்லிமென்ட் கூட்டுக்குழு அமைக்கப்பட்டுள்ளது. இதில், பா.ஜ., சார்பில் முன்னாள் மத்திய அமைச்சர்கள் அனுராக் தாகுர் மற்றும் பி.பி.சவுத்ரி, எம்.பி.,க்கள் பர்ஷோத்தம் ருபாலா, சம்பித் பத்ரா உள்ளிட்டோர் இடம்பெற்றுள்ளனர்.

காங்கிரசின் பிரியங்கா, மணீஷ் திவாரி மற்றும் சுக்தியோ பகத், சிவசேனாவின் ஸ்ரீகாந்த் ஷிண்டே, சமாஜ்வாதியின் தர்மேந்திர யாதவ், திரிணமுல் காங்.,கின் கல்யாண் பானர்ஜி, தி.மு.க.,வின் செல்வ கணபதி, தெலுங்கு தேசத்தின் ஹரிஷ் பாலயோகி, தேசியவாத காங்கிரஸ் சரத்பவார் அணியின் சுப்ரியா சுலே உள்ளிட்டோரும் இந்த குழுவில் இடம் பெற்றுள்ளனர்.